# எந்த வடிவு சிறந்தது?

ஸ்ரீ உ. வே. மஹா வித்வான் ப்ரதிவாதி பயங்கரம்

**அண்ணங்கராசாரியர் ஸ்வாமி**

அசோகவனத்திலிருந்த பிராட்டி திருவடி (ஹனுமார்) மூலமாகப் பெருமானுக்குச் செய்தி சொல்லியனுப்பினுள். அதைப் பெருமாளிடம் விண்ணப்பம் செய்யா நின்ற திருவடி, ஜீவிதம்தார யிஷ்யாமி மாஸம் தசரதாத்மஜ ** ஊர்த்வம் மா ஸாந்ந ஜீவேயம்* என்று சொன்னதையும் விண்ணப் பஞ் செய்தான்.

'இனி ஒரு மாத மளவுந்தான் ஜீவித்திருப் பேன், அதற்கு மேல் ஜீவித்திருக்க முடியாது என்று பிராட்டி சொன்ன வார்த்தை. இப்படிச்சொல்லக்கேட்ட பெருமாள் " அப்படியா? என்னைப் பிரிந்த பிராட்டி இன்னமும் ஒரு மாதம் வரை ஜீவித் திருப்பாளா? அப்படி ஒரு மாதம் ஜீவித்திருந்தாளாகில் நீடூழி காலமும் ஜீவித்திருக்க வல்லவளே என்றால் அப்படி ஜீவித்தி ருக்க முடியாது; *[* ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாம் அஸி தேக்ஷணும் *] குவளையங் கண்ணியான அப்பிராட்டியை விட்டு ஒரு நொடிப்பொழுதும் ஜீவிக்ககில்லேன் நான்'' என்று கூறியிருக்கிறுர். இவ்விரண்டு வார்த்தைகளையும் சேர்த்து ஆராயுமிடத்து பிரிவில் தரியாமை என்னும் விஷயத்தில் பிராட்டிக்கு தாழ்வும் பெருமானுக்கு ஏற்றமும் ஏற்படு கிறதல்லவா? இது கூடுமோ? * அகல கில்லேனிறையு மென்று அலர் மேல் மங்கை யுறை மார்வா* என்று ஆழ்வார் அருளிச் செய்த படி ஒரு நொடிப்பொழுதும் அகல கிலலேன் என்று சொல்லுமவள் பிராட்டியல்லவா? அப்படிப்பட்டவளன்றோ "ந ஜீவேயம் க்ஷணமபி'' என்று சொல்ல வேண்டும். அவன் ஊர்த்வம் மாஸாத் ந ஜீவேயம் என்று ஒரு மாதம் பிரிவை ஆற்றியிருக்க முடியும் என்பதும் "ந ஜீவேயம் க்ஷண மபி'' என்று க்ஷண காலமும் பிரிவாற்ற கில்லேன் என்று பெருமாள் சொல்லுவதுமாக வான்மீகி முனிவர் வசந வித் யாஸம் செய்திருப்பது நன்ருயில்லையே என்று முற்காலத்தில்

சிலர் பேசிக் கொண்டார்களாம்; அப்பேச்சு நம்பிள்ளை திருச் செவியில் விழுந்து வெகு அற்புதமான பரமார்த்தம் வெளியிட வாயிற்று.

மேலே யெடுத்துக்காட்டிய திவ்ய தம்பதிகளின் வசனங் களை ஆழ்ந்து நோக்கு மிடத்துப் பிராட்டிக்கே பெருமை விளங்கும். எங்ஙனே யென்னில்; பிராட்டியின் திருமேனி யழகைக் காட்டிலும் பெருமாள் திருமேனியழகு மிகவும் குறைந்த தென்பது இங்குத்தெரிய வருகிறது. பிராட்டியின் திருமேனியழகெல்லாம் ஒரு தட்டாய், கண்ணழகு மத்திரமே ஒரு தட்டா யிருக்கையிலும் அது தானும் * பும்ஸாம் த்ருஷ்டி சித்தா பஹாரி யென்று பேர் பேர் பெற்ற இராம பிரானது ஸௌந்தரியத்திற்காட்டிலும் வீறு பெற்றிருக்கை யாலும் அப்படிப் பட்ட பிராட்டியின் ஒரு நொடிப்போது பிரிவும் ஸஹிக்கத்தக்கதன்று என்பது பெருமாளுடைய திருமுகப் பாசுரத்தினால் [விநா தாம் அஸிதே க்ஷணம் என்ப தனால்] வெளிவந்து பிராட்டியின் பெருமை நிலை நாட்டி நின்றது. ஒரு மாஸம் பிரிவாற்றியிருப்பேனென்ற பிராட்டி யின் வார்த்தை இதற்குப் பிரதி கோடியாய் பெருமாளைப் பிரிந்து ஒரு மாதம் ஜீவித்திருக்கமுடியு மென்று சொன்ன முகத்தால் பெருமாளுடைய வடிவழகு அவ்வளவு சிறந்த தன்றென்பது காட்டிற்றுகிறது.

இவ்வார்த்தம் எவ்விடத்தில் வெளியிடப்பட்டிருக்கிற தென்னில்; திருவாய்மொழி (6-6-6) * என் விற்புருவக்கொடி தோற்றது மெய்யே * என்றவிடத்து ஈட்டில்.

"ஊர்த்வம் மாஸாத் ந ஜீவிஷ்யே என்னப் பண்ணும் வடிவைக் காட்டி * நஜீவேயம் க்ஷணமபி * என்னப் பண்ணும் வடிவைக் கிடீர் கொண்டது".

என்றுள்ள ஸ்ரீஸூக்தியின் சுவைமிகுதி காண்க. 'அழகில் குறைந்த வடிவைக் காட்டி அழகில் நிறைந்த வடிவைக் கொள்ளை கொண்டானே'! என்பதுதான் இங்குப் பரமதாத்பரியம்............ ★